மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அதிகளவில் மரவள்ளிக் கிழங்குகள் பயிரிடப்பட்டு, உபரி ஏற்பட்டால் அதுசம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக் கிழங்கு அதிகமாகப் பயிரிடப்படும் எங்கள் தொகுதியில் ஆலை அமைப்பது தொடர்பாக மீண்டும் பரிசீலனை செய்து, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் நோக்கிலே, இதை சிறப்பாகச் செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***27094—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2018 ஜூன் 4

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகம் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகம் பேருந்து நிலையத்திற்கு மிக அருகிலே அமைந்துள்ளதாலும், பொது மக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பாக வட்டாட்சியர் அலுவலகம் சென்று வர மிகவும் வசதியாக உள்ளதாலும், ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகம் போதிய அளவு இட வசதியுடன் உள்ளதாலும், தற்போது புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதனை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகம் தனது கட்டுப்பாட்டின்கீழ் 4 சரகங்களையும், 31 கிராம நிருவாக அலுவலர்களையும், 73 வருவாய்க் கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேலும், ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றார்கள். அதிக மக்கள் பயன்படுத்தக்கூடிய ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடமானது, மிகவும் பழமையான பழுதடைந்த கட்டடமாக உள்ளது. ஆலங்குடி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, ஆலங்குடி பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய கட்டடத்தின் அவசியத்தை, மக்கள் நலன் கருதி, இங்கே முன்வைத்திருக்கிறார்கள். பொதுவாக, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலே வருகிற கட்டடங்களை எல்லாம் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்ற அடிப்படையிலேதான் இந்தப் பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாற்று இடத்திலே அதை அமைக்கலாம் என்கிற ஆலோசனையைக் கூறுவாரானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு புதிய கட்டடத்தை உருவாக்குவதற்குப் பரிந்துரை செய்யும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடமானது, 100 ஆண்டுகளுக்கு அதிகமான, பழமையான பழுதடைந்த கட்டடம் ஆகும். இந்தக் கட்டடத்தில் தற்போது வட்டாட்சியர் அலுவலகம் இயங்கி வருகிறது. ஆலங்குடியினுடைய மையப் பகுதியிலே, ஆலங்குடி பேருந்து நிலையம் அருகில் இந்த அலுவலகம் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, இந்தக் கட்டடம் அமைந்துள்ள பகுதியில், பேருந்து நிலையத்திற்கு எதிரில் அரசுக்குச் சொந்தமாக 4 ஏக்கர் இடம் இருக்கிறது. எனவே, அந்த இடத்திலே வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டித் தர முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மேலும், ஆலங்குடி தாலுகா மிகப் பெரிய பரப்பளவைக் கொண்டது. குறிப்பாக, 2 பேரூராட்சிகள், 48 ஊராட்சிகளை உள்ளடக்கி, மிகப்பெரிய பரப்பளவை தனது நிர்வாக வரம்பிற்குள் அந்த வட்டாட்சியர் அலுவலகம் கொண்டுள்ளது. இந்நிலையில், ஆலங்குடி தாலுகாவிலே ஒரு சில பகுதிகளையும், அறந்தாங்கி தாலுகாவிலே ஒரு சில பகுதிகளையும் பிரித்து, ஆலங்குடி தாலுகா அலுவலகத்தைப் பிரித்து, கீரமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுகா அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியானது, விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் இப்பொழுது மின்மாற்றிகள் பழுதடைந்த காரணத்தினால் அவற்றை மாற்றித் தரக் கோரியிருக்கிறார்கள். எனது தொகுதிக்குட்பட்ட 70–க்கும் மேற்பட்ட இடங்களில் புதிய மின்மாற்றிகளை மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையையும் அரசு நிறைவேற்றித் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 100 ஆண்டுகளான பழைய கட்டடம் என்று சொன்னார்கள். அதையேதான் நானும் சொன்னேன். தொல்லியல் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தினாலே, அதைப் பாதுகாக்க வேண்டும். பொதுவாக, பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலே இல்லாத ஒரு நிலை ஏற்படுகிறபோதுதான், அதற்கு புதிய கட்டடம் நாம் கட்டித் தருகிறோம். இருந்தபோதிலும்கூட, மக்கள் நலன் கருதி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வைத்திருக்கிற இந்தக் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, புதிய கட்டடம் அமைவதற்கும் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 11–05

அதேபோல, புதிய தாலுகா வேண்டுமென்ற கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியின் மக்கள்தொகை, பரப்பளவு மற்றும் வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்படும். அதற்குத் தகுதி இருக்கின்றபட்சத்தில், உயர் மட்டக் குழு பரிசீலனை செய்து, பரிந்துரையை அனுப்பி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, இதுகுறித்தும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

பேருந்து வசதி

***4938—திரு. ப. கார்த்திகேயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி பகுதியிலிருந்து அடுக்கம்பாறையிலுள்ள அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது ஆற்காட்டிலிருந்து சத்துவாச்சாரி வழியாக அடுக்கம்பாறை அரசு பொது மருத்துவமனைக்கு நகரப் பேருந்து மூலமாக 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த நடைகளில் சராசரி பயணிகளின் அடர்வு 32 சதவிகிதம் என்ற குறைந்த அளவிலேயே இருக்கிறது. எனவே, தற்போதைய பேருந்து வசதியே போதுமானதாகும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது தமிழினத் தலைவர் அவர்களையும், தளபதி அவர்களையும் வணங்குகிறேன். நான் வசிக்கின்ற வேலூர் தொகுதியிலிருந்து சத்துவாச்சாரி வழியாக அடுக்கம்பாறை அரசு பொது மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், ஆற்காட்டிலிருந்து பேருந்து வருகிறவரை நோயாளிகள் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. சத்துவாச்சாரியில்*